


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூக பாதுகாப்பு துறையின் சார்பாக, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, "வளரிளம் பருவத்தினரிடையே தற்கொலை எண்ணத்தை தவிர்த்தல் குறித்த ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்றுனர் பயிற்சி" மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (31.01.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 82/2017 நாள்: 31.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**வளரிளம் பருவத்தினரிடையே தற்கொலை எண்ணத்தை தவிர்த்தல் குறித்த ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்றுனர் பயிற்சி**
**இன்று (31.01.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூக பாதுகாப்பு துறையின் சார்பாக, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, "வளரிளம் பருவத்தினரிடையே தற்கொலை எண்ணத்தை தவிர்த்தல் குறித்த ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்றுனர் பயிற்சி" மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (31.01.2017) நடைபெற்றது.

பயிற்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தெரிவித்ததாவது:-

குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ், ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகப்பு திட்டம் உருவாக்கப்பட்டு, இத்திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு செயல்பட்டு வருகிறது.

சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் செயல்படும் இவ்வலுவலகம் மூலம், பல்வேறு அரசு அலுவலர்கள் மற்றும் அரசு சாரா அலுவலர்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பயிற்சிகளை வழங்கி வருகிறது. அந்தவகையில் மாநில அரசின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு அரசு வளரிளம் பருவத்திலுள்ள மாணவர்களிடையே தற்கொலை எண்ணத்தினை தவிர்க்க, மாவட்டம் தோறும் 100 நபர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்கள் மூலம் தேர்வு காலத்திற்கு முன்பும், பின்பும் 3 மாதங்களுக்கு மாணாக்கர் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டும் பயிற்சி வழங்கும் திட்டத்தினை 32 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நமது மாவட்டத்தில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம் "வளரிளம் பருவத்திலுள்ள மாணவர்களிடையே தற்கொலை எண்ணங்களை தவிர்த்தல்" குறித்து, ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்றுனர் பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில், மாணவர்களிடையே தற்கொலை எண்ணம் தோன்றுவதற்கான காரணங்கள் என்ன, அத்தகைய எண்ணமுடைய குழந்தைகளை எவ்வாறு கண்டறிந்து, அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது குறித்தும், அவர்களது பெற்றோருக்கும் ஆலோசனை வழங்குதல் குறித்தும், சிகிச்சை முறைகள் குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது.

இன்றைய காலத்தில், மாணவர்கள் ஒரு சிறிய நிகழ்வுக்காக தற்கொலை என்ற மிக பெரிய கொடுர செயலுக்கு ஆளாகிறார்கள். குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், அவர்களது குடும்பத்தில் ஏற்படும் சண்டைகள், காதல் தோல்வி, தேர்வுகளில் குறைந்த மதிப்பெண்கள் போன்ற சம்பவங்களுக்கு தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதனை முற்றிலுமாக தடுப்பதற்காகவும், அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து, மனம் மாற்றுவதற்காக ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் பெற்றோர்கள் முயற்சிகள் மேற்கொண்டால், வரும் காலத்தில், நமது மாவட்டத்தில் எந்தவொரு மாணவர்களிடையே தற்கொலை சம்பவம் ஏற்படாது என தெரிவித்தார்.

பயிற்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. எஸ். குமுதா, மாவட்ட நன்னடத்தை அலுவலர் டாக்டர் வெ. வெங்கட்ராமன், நாகர்கோவில் மாவட்ட கல்வி அலுவலர் திரு. பி. நடராஜன், மாவட்ட சுற்றுசூழல் அலுவலர் திரு. விஜயகுமார், அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மனோதத்துவ நிபுணர் டாக்டர். அருள்பிரகாஷ், நூதனா டிரஸ்ட் இயக்குநர் திரு. கிளமண்ட் வின்சிலி, திரு. அருள்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.